பிரதமர் பதவிக்கு மன்மோகன் சிங்கை தேர்ந்தெடுத்தது ஏன்?

சுயசரிதையில் சோனியா தகவல்

புது தில்லி, நவ. 10: '2004-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி வென்றதும், பிரதமர் பதவிக்கு மன்மோகன் சிங்கை தேர்வு செய்தது ஏன்?' என்ற காரணத்தை தனது சுயசரிதை புத்தகத்தில் காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சோனியா காந்தி விவரித்துள்ளார்.

மேலும், பிரணாப் முகர்ஜிக்கு பிரதமராகும் விருப்பம் இருந்ததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2004 தேர்தல் வெற்றிக்குப் பிறகு, சோனியாதான் பிரதமராவார் என்ற எதிர்பார்ப்பு எழுந்தது. ஆனால், பிரதமர் பதவியை ஏற்க அவர் மறுத்தார். மன்மோகன் சிங் தொடக்கத்தில் பிரதமர் பதவியை ஏற்கத் தயங்கினாலும், பின்னர் சோனியா காந்தியால் சம்மதிக்க வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து, செவ்வாய்க்கிழமை (நவ. 10) விற்பனைக்கு வந்த 'பிலாங்கிங்: எ ஜர்னி ஆஃப் லவ்' என்ற தலைப்பிலான 526 பக்கங்கள் கொண்ட தனது சுயசரிதை புத்தகத்தில் சோனியா கூறியிருப்பதாவது:

2004 தேர்தல் வெற்றிக்குப் பிறகு, பிரதமர் பதவியை நிராகரிக்க முடிவு செய்த பிறகு, அந்தப் பதவிக்கு வேறு யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற முடிவை எடுக்க வேண்டியிருந்தது.

அந்தப் பதவியை அனுபவமும் தகுதியும் வாய்ந்த பல மூத்த தலைவர்கள் ஏற்கத் தயாராக இருந்தனர். ஆனால். அவர்கள் அனைவரிலும், நீண்ட காலமாக எனது பார்வையில் பழிச் சொல்லுக்கு அப்பாற்



கோப்புப் படம்

பட்டவராகவும், ஆளுகை குறித்த ஆழ்ந்த மற்றும் முழுமையான புரிதலைக் கொண்டவராகவும் இருந்தவர் மன்மோகன் சிங்.

அனுபவம் வாய்ந்த பொருளாதார நிபுணரான அவர், 1990-களின் முற்பகுதியில் அப்போதைய பிரதமர் பி.வி. நரசிம்ம ராவ் தலைமையில் இந்தியாவில் பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்திய நிதி அமைச்சராக இருந்தார்.

அவர் கட்சியில் எந்த அணியுடனும் அங்கம் வகிக்கவில்லை. மேலும், பல ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட கட்சியின் கொள்கைகளை நிர்வகித்துத் தொடரும் நமது திறனைப் பற்றிய பலரின் சந்தேகங்களை மன்மோகன் சிங் தணிப்பார் என்ற நம்பிக்கை இருந்தது.

அறிஞராகவும், தொழில்நுட்ப நிபுணராகவும் அவர் ஆற்றிய சாதனைகளைத் தவிர, அன்பான மற்றும் இரக்கமுள்ள இதயத்தை அவர் கொண்டிருந்தார். அவரின் நேர்மையை கேள்விக்குட்படுத்த முடியாது. எனவே, நமது அன்புக்குரிய நாடு மன்மோகன் சிங் கைகளில் பாதுகாப்பாக இருக்கும் என்று எனக்குத் தெரியும்.

இது குறித்து, கட்சியின் மூத்த சகாக்களுடன் நான் கலந்தாலோசனை நடத்தினேன். அப்போது, அவர்கள் எனது முடிவை ஓரளவு ஏற்றுக் கொண்டதாகத் தோன்றியது. அவர்களிடம் மன்மோகன் சிங்கின் பெயரைப் பரிந்துரைத்தபோது அவர்கள் அதை எதிர்க்கவில்லை. அவரின் அனுபவத்தின் ஆழத்தையோ அல்லது இந்தியாவுக்கு நன்மை செய்யும் கண்ணியமான மனிதர் என்ற அவரது நற்பெயரையோ யாராலும் மறுக்க முடியவில்லை.

பிரணாபுக்கு பிரதமராகும் விருப்பம்...: ஐக்கிய முற்போக்கு ஆட்சிக் காலத்தில், அரசை நான் பின்னால் இருந்து இயக்குவதாக விமர்சனங்கள் எழுந்தன. ஆனால், அப்போது மன்மோகன் சிங்தான் பிரதமர் என்பதில் நான் தெளிவாக இருந்தேன்.

கட்சித் தலைவர் என்ற முறையில் எனது கருத்தையோ ஆலோசனையையோ அவருக்குத் தெரிவிக்கலாம் அல்லது அவருடன் முரண்படலாம் என்றாலும், அவருக்குக் கட்டுப்பட்டு நடப்பது எனது கடமை என்பதில் தெளிவாக இருந்தேன்.

குறிப்பாக, எதிரிகள் மகிழ்ச்சியடையவும், அரசை பலவீனப்படுத்தவும் வாய்ப்பளிக்கும் எந்தவொரு தவறான புரிதலுக்கு எந்தச் சூழல்நிலையிலும் நான் காரணமாக இருக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன்.

கட்சிக்கும் அரசுக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வைச் சுட்டிக்காட்டும் அதே வேளையில், பிரணாப் முகர்ஜி பிரதமராகும் தனது விருப்பத்தைசூசகமாகத்தெரிவித்த நிகழ்வையும் தனது சுயசரிதையில் சோனியா விவரித்துள்ளார்.



படுகொலை செய்யப்பட்ட தனது பாட்டி இந்திரா காந்தியின் இறுதிச் சடங்கின்போது தந்தை ராஜீவ் காந்தியை அணைத்தபடி இளம் ராகுல் காந்தி. சோனியாவின் சுயசரிதையில் இந்தப் படம் இடம்பெற்றுள்ளது.

2010-ஆண்டு காலகட்டத்தில் பிரணாப் முகர்ஜிக்கும், மத்திய நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரத்துக்கும் இடையே கடுமையான கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன. அப்போது நடைபெற்ற ஓர் உரையாடலின்போது,'ஒருவேளை தலைமைப் பொறுப்பில் மாற்றம் தேவைப்படலாம்' என்ற கருத்தைக் கூறி என்னை பிரணாப் முகர்ஜி அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

இதன் மூலம், பிரதமர் ஆக வேண்டும் என்ற அவரின் நீண்ட கால விருப்பத்தை சூசகமாகத் தெரிவித்ததாக புரிந்துகொண்டேன். அதைத் தொடர்ந்து மெதுவாக பேச்சை மாற்றினேன். இதனால், அவர் ஏமாற்றமடைந்திருக்கலாம் என்றாலும், அதை அவர் ஒருபோதும் வெளிக்காட்டவில்லை.

அதைத் தொடர்ந்து, 2012-ஆம் ஆண்டு மிக உயரிய குடியரசுத் தலைவர் பதவிக்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணியின வேட்பாளராக காங்கிரஸ் பரிந்துரைத்து, அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று சோனியா குறிப்பிட்டுள்ளார்.

பிரதமராக பிரணாப் முகர்ஜி ஆசைப்பட்டதில் அதிர்ச்சி அடைய என்ன உள்ளது?

சோனியாவுக்கு சர்மிஷ்டா கேள்வி



புது தில்லி, நவ.10: 'மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவராகவும் இருந்த பிரணாப் முகர்ஜி பிரதமராக ஆசைப்பட்டதில் அதிர்ச்சி அடைய என்ன உள்ளது' என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்திக்கு பிரணாப் முகர்ஜியின் மகள் சர்மிஷ்டா முகர்ஜி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், 'பிரதமராக பிரணாப் முகர்ஜி ஆசைப்பட்டதில், அதிர்ச்சி அடைய என்ன உள்ளது? பல பதிற்றாண்டுகளாக அரசியல் மற்றும் நிர்வாக அனுபவம், கடின உழைப்பு, அறிவாற்றல் ஆகியவை இருக்கும்போது லட்சியத்துடன் ஒருவர் இருப்பது குற்றமா?

எனது தந்தை மிகவும் எளிய பின்னணியில் இருந்து வந்தவர். அவர் என்னவெல்லாம் சாதித்தாரோ, அவை எல்லாம் அவரின் கடின உழைப்பு மற்றும் திறமையால் நிகழ்ந்தவை. வாரிசு அரசியல் காரணமாக, அவருக்குப் பிரதமர் பதவி உள்பட எந்தப் பதவியும் எளிதாகக் கிடைக்கவில்லை.

ஒரு தகுதியான நபர் பிரதமராக வேண்டும் என்று ஆசைப்படுவதில் என்ன தவறு உள்ளது? நேரு குடும்பத்தைச் சாராத ஒருவர் பிரதமராக வேண்டும் என்ற ஆசையை வளர்த்துக் கொள்ளத் துணிந்துவிட்டாரே? அதைவிட துணிச்சலாக, அந்த விருப்பதை தன்னிடமே மறைமுகமாகக் கூறிவிட்டாரே என்ற காரணத்தால் சோனியா அதிர்ச்சி அடைந்திருந்தால் தவிர, இதில் தவறு ஏதும் இல்லையே என்று பதிவிட்டுள்ளார்.

'கோதுமை சாகுபடி புதிய உச்சம் எட்டும்'

புது தில்லி, நவ. 10: நடப்பு பருவத்தில் இந்தியாவில் கோதுமை சாகுபடி இதுவரை இல்லாத அளவுக்கு புதிய உச்சத்தை எட்டும்; எனினும், 2027 ஏப்ரல், மே வரையிலான வானிலை நிலவரத்துக்கு ஏற்ப விளைச்சல் அமையும் என்று ஐ.நா. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்திய வானிலையில் தற்போது நிலவி வரும் 'எல்-நினோ' தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

அடுத்த ஆண்டு மார்ச் முதல் ஜூன் மாதம் வரையில் அறுவடை காலத்துக்கு ஏற்ப, இந்தியா மற்றும் தூர கிழக்கு ஆசிய நாடுகளில் தற்போது கோதுமை விதைப்பு நடைபெறுகிறது.

2025-இல் இந்தியாவின் கோதுமை உற்பத்தி 117.19 மில்லியன் டன்னாக இருந்தது. இது 2026-ஆம் ஆண்டில் 120.7 மில்லியன் டன்னாக உயர்ந்து புதிய உச்சத்தை எட்டியது. கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி கோதுமை உற்பத்தி 111.8 மில்லியன் டன்னாக இருந்த நிலையில், 2026-ஆம் ஆண்டில் விளைச்சல் கணிசமாக அதிகரித்தது.

அரசின் ஆதரவு: இந்தியாவில் கோதுமை சாகுபடி பரப்பு புதிய உச்சத்தை எட்டும் என எதிர்பார்ப்பதற்கு அரசின் ஊக்கத்திட்டங்களே முக்கியக் காரணம் என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

குறிப்பாக, விவசாயிகளுக்கு லாபகரமான குறைந்தபட்ச ஆதரவு விலை, உர மானியங்கள் ஆகியவை கோதுமை சாகுபடியை அதிகரிக்க விவசாயிகளை ஊக்குவித்துள்ளது.

சீனா, பாகிஸ்தான்: தூர கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய கோதுமை உற்பத்தி நாடான சீனாவில், கோதுமை சாகுபடி பரப்பு கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி அளவிலேயே இருக்கிறது.

பாகிஸ்தானில், உள்நாட்டுச் சந்தையில் கோதுமையின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளதால், விவசாயிகள் கூடுதல் பரப்பில் கோதுமை சாகுபடி செய்ய வாய்ப்புள்ளது. இதனால் அந்நாட்டிலும் கோதுமை சாகுபடி பரப்பு சராசரியை விட அதிகரிக்கும்.

அதே நேரத்தில் 'எல்-நினோ' விளைவால் ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் கோதுமை சாகுபடி நடைபெறும் முக்கியப் பகுதிகளில் சராசரியை விட அதிக மழைப்பொழிவு ஏற்பட வாய்ப்புள்ளது.

கொரிய தீபகற்பம், சீனாவின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகள், பாகிஸ்தானின் மத்திய மற்றும் வடக்குப் பகுதிகள், ஆப்கானிஸ்தானின் பெரும்பாலான பகுதிகள் இதில் அடங்கும்.

கூடுதல் மழைப்பொழிவு கோதுமைப் பயிர் வளர்ச்சிக்கு சாதகமாக அமையக்கூடும். எனினும், சில குறிப்பிட்ட பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயத்தையும் அதிகரிக்கலாம் என்று ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

கர்நாடக அரசு மூன்றாண்டுகளில் ரூ. 473 கோடி விளம்பரச் செலவு

பாஜக மாநிலத் தலைவர் விஜயேந்திரா

பெங்களூரு, நவ.10: கர்நாடக காங்கிரஸ் அரசு கடந்த 3 ஆண்டுகளில் விளம்பரங்களுக்காக ரூ.473 கோடி செலவிட்டுள்ளதாக அந்த மாநில பாஜக தலைவர் விஜயேந்திரா குற்றம்சாட்டினார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தளத்தில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட பதிவில் அவர் கூறியிருப்பதாவது: காங்கிரஸ் ஆட்சியில் கடந்த 3 ஆண்டுகளாக விளம்பரங்களுக்காக மட்டும் ரூ. 473 கோடி செலவிடப்பட்டுள்ளது. விளம்பரங்களுக்காக நாளொன்றுக்கு ரூ. 43 லட்சத்துக்கும் அதிகமாக அரசு செலவிடுகிறது.

சாலைகள் மோசமடைந்துள்ளன, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர், ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத்தொகை செலுத்தப்படவில்லை. இத்தகைய பிரச்னைகளுக்கு தீர்வு காணாமல் அரசு தனது விளம்பரத்துக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

பால் விலை, பேருந்துக் கட்டணம், மின்சாரக் கட்டணம் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு மக்களை வாட்டிவதைக்கிறது. காங்கிரஸ் அரசின் 5 வாக்குறுதித் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் நிதி மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் இருக்கின்றன. மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைநிறைவேற்றுவதைவிட அவற்றை விளம்பரப்படுத்துவதிலேயே அரசு ஆர்வம் காட்டுகிறது. வளர்ச்சிப் பணிகளுக்கு நிதி இல்லை என்று கூறும் அரசு, விளம்பரங்களுக்கு மட்டும் தாராளமாகச் செலவிடுவது ஏன்?

முதல்வர் டி.கே.சிவகுமாரின் புகைப்படங்களை நாளிதழ்களில் வெளியிடுவதை மக்கள் எதிர்பார்க்கவில்லை. மாறாக, தரமான சாலைகள், வேலைவாய்ப்பு, விவசாயிகளுக்கு ஆதரவு, ஒப்பந்ததாரர்களுக்கு உரிய நேரத்தில் பணம் வழங்குதல் ஆகியவற்றையே எதிர்பார்க்கின்றனர்.

அரசின் செயல்பாட்டை விளம்பரங்களின் எண்ணிக்கையை வைத்து மதிப்பிடாமல், மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் முன்னேற்றத்தை வைத்தே மதிப்பிட வேண்டும் என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

கைவிடப்பட்ட கப்பல்கள்

முக்கிய துறைமுகங்கள் தகவலளிக்க டிஜிஎம்எ உத்தரவு

புது தில்லி, நவ.10: கைவிடப்பட்ட, தடுத்து வைக்கப்பட்ட, பழுதடைந்த அல்லது பாதுகாப்பாக இயக்க முடியாத நிலையில் உள்ள கப்பல்கள் குறித்த விவரங்களை சமர்ப்பிக்குமாறு அனைத்து முக்கிய துறைமுகங்கள், பிற துறைமுக நிர்வாக அமைப்புகளிடம் கடல்சார் நிர்வாக தலைமை இயக்குநரகம் (டிஜிஎம்எ) உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து அந்த இயக்குநரகம் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், இதுபோன்ற கப்பல்கள் குறித்த ஒருங்கிணைந்த பதிவேடுகளை பராமரிக்க விரும்புவதாக டிஜிஎம்எ தெரிவித்துள்ளது. மேலும் அமைவிடம், சூழல் காரணமாக மக்களின் பாதுகாப்பு, கப்பல்போக்குவரத்து, துறைமுகச்செயல்பாடுகள், துறைமுகக் கட்டமைப்பு, கடல் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய பிற கப்பல்கள் குறித்த விவரங்களையும் சேகரிக்க உள்ளதாக டிஜிஎம்எ குறிப்பிட்டுள்ளது.

எனவே தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இடங்கள், கப்பல்கள் நிறுத்தப்படும் இடங்கள், நங்கூரமிடும் இடங்கள், துறைமுக நுழைவுப் பாதைகள் உள்ளிட்ட பகுதிகளில் இருக்கும் இதுபோன்ற கப்பல்கள் குறித்த தகவல்களை அளிக்குமாறு முக்கிய துறைமுகங்கள், பிற துறைமுக நிர்வாக அமைப்புகளிடம் டிஜிஎம்எ கேட்டுக்கொண்டுள்ளது.

எண்ம மோசடி தடுப்பு நடவடிக்கைகள்

பட்டியலிட சமூக ஊடகங்களுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு

புது தில்லி, நவ. 10: எண்மக் கைது மோசடி உள்ளிட்ட இணையவழிக் குற்றங்களைத் தடுக்க எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகள் குறித்த விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு வாட்ஸ்ஆப் உள்ளிட்ட சமூக ஊடகங்களுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

எண்மக் கைது மோசடி மற்றும் அதுதொடர்புடைய இணையவழி மோசடிகளைத் தடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி மற்றும் வி.மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு தாமாக முன்வந்து வழக்காக விசாரித்து வருகிறது.

இந்த வழக்கு அண்மையில் விசாரணைக்கு வந்தபோது, வாட்ஸ்ஆப் நிறுவனம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் கபில் சிபல், 'எண்ம மோசடி தடுப்பு நடவடிக்கைகளை வாட்ஸ்ஆப் நிறுவனம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. இதுவரை 9,400 கணக்குகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விரிவான பதில் மனு விரைவில் சமர்ப்பிக்கப்படும். மேலும், இதுபோன்ற சந்தேகத்துக்குரிய கணக்குகளை அடையாளம் கண்டு, எச்சரிக்கை விடுக்கும் வகையில் மென்பொருளை உருவாக்கும் பணியிலும் வாட்ஸ்ஆப் ஈடுபட்டுள்ளது' என்றார்.

இதைக் கேட்ட நீதிபதிகள், 'எண்மக் கைது மோசடி உள்ளிட்ட இணையவழிக் குற்றங்களைத் தடுக்க எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகள் குறித்த விவரங்களை வாட்ஸ்ஆப் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இந்தத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான முன்மொழிவை, இந்திய இணையவழிக் குற்ற ஒருங்கிணைப்பு மையத்திடமும் (ஐ4சி) சமர்ப்பிக்க வேண்டும்' என்று அறிவுறுத்தி, விசாரணையை நவம்பர் 23-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

குஜராத்தின் இரு விமான நிலையங்கள் குடிவரவு சாவடிகளாக அறிவிப்பு

புது தில்லி, நவ.10: குஜராத் மாநிலத்தில் உள்ள ராஜ்கோட் ஹிராசர் மற்றும் வதோதரா விமான நிலையங்களை அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு சாவடிகளாக மத்திய உள்துறை அமைச்சகம் செவ்வாய்க்கிழமை அறிவிக்கை செய்தது.

இதன் மூலம் நாட்டிலுள்ள மொத்த அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு சாவடிகளின் எண்ணிக்கை 41-ஆக உயர்ந்தது.

இதுதொடர்பான மத்திய அமைச்சகத்தின் அரசிதழ் அறிவிக்கையில் கூறியிருப்பதாவது:

ராஜ்கோட் ஹிராசர் மற்றும் வதோதரா விமான நிலையங்கள் புதிய குடிவரவு சாவடிகளாக பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

அதுபோல மகாராஷ்டிரத்தில் உள்ள ஜிகார் துறைமுகம் புதிய குடிவரவு சாவடியாக பட்டியலில் சேர்க்கப்பட்டுள்து.

அதே நேரம், ஆந்திரத்தின் விசாகப்பட்டினம் விமான நிலையம், உத்தர பிரதேசத்தின் லக்கிம்பூரில் உள்ள கௌரிபந்தா நில துறைமுகம் ஆகியவை அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு சாவடிகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

SUNDARAM HOME — Sundaram Finance Group —

பதிவு அலுவலகம் : எண். 21 பட்டுலோஸ் சாலை சென்னை - 600 002.
பெருநிறுவன அலுவலகம் : சுந்தரம் டவர்ஸ், எண் 46, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600014. தொ.பே.:044-28515267.
கிளை அலுவலகம்: கதவு எண்கள் 2/72&2/80, பூந்தமல்லி நெடுஞ்சாலை, காட்டுப்பாக்கம், சென்னை-600056.

விற்பனை அறிவிப்பு

சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழ், பிரிவு 13(2) உடன் படிக்கப்படும் பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்திக் கோரிக்கை அறிவிப்பினைக் கடன்தாரருக்கு அனுப்பி, அவ்வறிவிப்பு நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அதில் குறிப்பிட்டுள்ள தொகையினைத் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.
கடன்தாரர்(கள்) அத்தொகையைச் சட்டப்படியான காலக்கெடுவுக்குள் செலுத்தத் தவறியதால், அதிகாரப்பூர்வ அலுவலர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4)-இன் கீழுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தியும், கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002-இன் விதி 8-இன்படியும், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தைச் சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.
பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள சொத்து, கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002-இன் விதிகள் 8 மற்றும் 9-இன் கீழ், **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் அடிப்படையிலும்**, விற்பனையாளரிடம் நிவாரணம் கோரும் உரிமையின்றியும் விற்கப்படும். இதற்காக **23/12/2026** அன்று 14.30 மணி வரை பொதுமக்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஏலப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.
ஏல விற்பனையில் பங்கேற்க விரும்புவோர், வாடிக்கையாளர் விவர (KYC) ஆவணங்களுடன் தங்கள் ஏலப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறையில் வைத்து, அதன் மீது "**OfferforSaleofAssetsA/c.Mrs.SangeethaB**" என எழுதி, **23/12/2026** அன்று 14.30 மணிக்குள் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்குக் கிடைக்குமாறு ஒப்புகைச் சீட்டுடன் கூடிய விரைவு அஞ்சல் (SPAD) மூலமாக மட்டும் அனுப்ப வேண்டும். முகவரி: அதிகாரப்பூர்வ அலுவலர், **சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்**, எண் 23,2ஆவது தளம், கதீட்ரல் தோட்டச் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600034.
ஏலப்புள்ளியுடன் டேவணித்தொகைக்கான (EMD) கேட்பு வரைவோலையை (DD) **SUNDARAM HOME FINANCE LTD.**, என்ற பெயரில் இணைக்க வேண்டும்.**23/12/2026** அன்று 14.30 மணிக்குப் பிறகு பெறப்படும் ஏலப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். ஒப்புகைச் சீட்டுடன் கூடிய விரைவு அஞ்சல் (SPAD) மூலம் **23/12/2026** அன்று 14.30 மணி வரை பெறப்படும் மூடி முத்திரையிட்ட ஏலப்புள்ளிகள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் **23/12/2026** அன்று 15:00 மணிக்குத் திறக்கப்படும். வெற்றி பெறும் ஏலதாரர், விற்பனை உறுதிப்படுத்தல் கிடைத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் மீதித் தொகையைச் செலுத்த வேண்டும். மேற்கூறியவாறு மீதித் தொகை செலுத்தப்பட்ட பிறகே விற்பனை முடிவடையும்.

கடன்தாரர் மற்றும் கூட்டுக் கடன்தாரரின் பெயரும் முகவரியும்	ஈடு வைத்துப் பெற்ற கடன் (ரூ.)	சொத்துக்குத் தீர்மானிக்கப்பட்ட குறைந்தபட்ச விலை	சொத்து ஆவண ஆய்வு நடத்தப்படும் இடம்
திருமதி சங்கீதா B(கடன்தாரர்), எண் 1/9, அப்பாதுரை பிள்ளை தெரு, திரு.வி.க. நகர், துண்டலம், நூம்பல், சென்னை-600077. **திருமதி சங்கீதா B(முதலாளி)**, எண் 1/9, அப்பாதுரை பிள்ளை தெரு, திரு.வி.க. நகர், செட்டியார் அகரம், துண்டலம், சென்னை-600077. **திரு. தியாகராஜன் A(கூட்டுக் கடன்தாரர்)**, எண் 1/9, அப்பாதுரை பிள்ளை தெரு, திரு.வி.க. நகர், துண்டலம், நூம்பல், சென்னை-600077. **திரு. தியாகராஜன் A(முதலாளி)**, எண் 1/9, அப்பாதுரை பிள்ளை தெரு, திரு.வி.க. நகர், செட்டியார் அகரம், துண்டலம், சென்னை-600077. **திரு. தியாகராஜன் A(சொத்து-1)**, கதவு எண் 1/21-இன் வடபகுதி, பெரிய தெரு, பழைய சர்வே எண் 90/9, புதிய சர்வே எண் 161/3, நரசிங்கபுரம் கிராமம், பேரம்பாக்கம்-631402.	**ரூ. 17,72,587** (ரூபாய் பதினேழு இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து ஐந்நூற்று எண்பத்தேழு மட்டும்),11.11.2026 நாள்படி. இத்துடன் உண்மையில் பணம் செலுத்தும் நாள் வரையிலான மேல்வட்டி மற்றும் இதர கட்டணங்கள் ஏதேனும் இருந்தால் அவையும் சேரும்.	**ரூ. 24,62,000/-** (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து அறுபத்திரண்டாயிரம் மட்டும்) / டேவணித் தொகை: ஏலப்புள்ளித் தொகையில் 25%	**சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்**, எண் 23, கதீட்ரல் தோட்டச் சாலை,2ஆவது தளம், நுங்கம்பாக்கம், சென்னை -600034. / **ஏலப்புள்ளிகள் திறக்கப்படும் இடம்:** சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட், எண் 23, கதீட்ரல் தோட்டச் சாலை,2ஆவது தளம், நுங்கம்பாக்கம், சென்னை -600034. / **ஏலப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்:** 23.12.2026 அன்று 15.00 மணி

கடனீட்டுச் சொத்து விவரம்: திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், எண் 130, நரசிங்கபுரம் கிராமத்தில், பழைய சர்வே எண் 90/9 மற்றும் புதிய சர்வே எண் 161/3-இல் அடங்கியதும், பட்டாவின்படி புதிய சர்வே எண் 161/3B-இல் அமைந்ததும், கதவு எண் 1/21 கொண்டதுமான, வடபுறம் 969 சதுர அடி பரப்பளவுள்ள நிலம்,721.5 சதுர அடி கட்டடப் பரப்பளவுள்ள கட்டடம் மற்றும் அதிலுள்ள கட்டுமானப் பகுதிகள் அனைத்தும். எல்லைகள்: வடக்கு: சர்வே எண் 159, பெரிய தெரு. தெற்கு: சர்வே எண் 161/3-இல் உள்ள காலி நிலம். கிழக்கு: சர்வே எண் 161/3-இன் தென்புறம் உள்ள 4 அடி சாலை. மேற்கு: சர்வே எண் 161/2-இல் சண்முக முதலிக்குச் சொந்தமான நிலம். அளவுகள்: வடக்குப் பக்கம் 16 அடி, தெற்குப் பக்கம் 15 அடி, கிழக்குப் பக்கம் 62.6 அடி, மேற்குப் பக்கம் 62.6 அடி. காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் பேரம்பாக்கம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

குறிப்பு: ஆர்வமுள்ள வாங்குநர்கள் ஆவணங்களைச் சரிபார்த்தும், சொத்தை ஆய்வு செய்தும், அதன் உரிமை, தன்மை மற்றும் நிலை குறித்து நிறைவு பெற்ற பின்னர் ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட பிறகு சொத்தின் உரிமை அல்லது தன்மை குறித்து ஏதேனும் சர்ச்சை எழுந்தால் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

திரு. சங்கீதா B அவர்களின் சொத்து விற்பனை குறித்த விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை அறிய, கடன் கணக்கு எண் POR20170053-க்கான www.sundaramhome.in/uploads/files/sale_notice/POR20170053.pdf முகவரியைப் பார்க்கவும்.

தொடர்பு எண்: திரு. பகவதி பெருமாள் -9944267387

நாள்:11-11-2026

சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பில்
அதிகாரப்பூர்வ அலுவலர்

பஞ்சாப் நேஷனல் வங்கி ...the name you can BANK upon !

SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014.
தொலைபேசி: 044-28112261-90, மின்னஞ்சல்: ZS8341@pnb.bank.in

2002ன் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8 (6) மற்றும் 9 (1) ன் கீழ் அசையாச் சொத்திற்கான மின் ஏல விற்பனை குறித்து பொதுமக்களுக்கான அறிவிப்பு
கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் 8(6) & 9(1)ன் கீழ் பஞ்சாப் நேஷனல் வங்கியிடம் அடமானத்திலுள்ள ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை

பஞ்சாப் நேஷனல் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பஞ்சாப் நேஷனல் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **ஆக்கப்பூர்வ சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்களிடமிருந்து பெற வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளையும் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **26.11.2026** அன்று மின் ஏல விற்பனை செய்யப்படும். என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர் / அடமானதாரர் / ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி : 1) M/S Orion Water Treatment PVT Ltd மனை எண். 852, சர்வே எண்.1436 VGP இராமானுஜர் நகர் பகுதி-II. St Joseph School எதிரில், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம் -602108. **2) திரு. M. பாஸ்கரன். (Orion Water Treatment PVT Ltd - இன் இயக்குநர் / ஜாமீன்தாரர்)** மனை எண்.852, சர்வே எண்.1436 VGP இராமானுஜர் நகர் பகுதி-II. St Joseph School எதிரில், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம் -602108 **3) திரு.M. இராதாகிருஷ்ணன் (Orion Water Treatment PVT Ltd - இன் இயக்குநர் / ஜாமீன்தாரர்)** மனை எண்.852, சர்வே எண்.1436 VGP இராமானுஜர் நகர் பகுதி-II. St Joseph School எதிரில், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம் -602108. **4) திரு. J. இரவிஆரக (Orion Water Treatment PVT Ltd - இன் இயக்குநர் / ஜாமீன்தாரர்)** எண்.251, திருநகர், முதல் தெரு, வடபழனி, சென்னை - 600026, **5) திரு. J. இளங்கோ (லேட். MS. இராஜாகனி அம்மாள் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுதாரர் -M/s. (Orion Water Treatment PVT Ltd - இன் ஜாமீன்தாரர்)** எண்-6/25, திருநகர் முதல் தெரு, வடபழனி, சென்னை -600026. **6) Ms. M. வெங்கடலட்சுமி (Orion Water Treatment PVT Ltd - இன் இயக்குநர் / ஜாமீன்தாரர்)** Pine A-33 பிளாக், சிட்டி லைட்ஸ் மெடோஸ் அப்பார்ட்மெண்ட், நொளம்பூர், முகப்பேர், சென்னை - 600037. **7) திரு. சதீஷ்குமார் (Orion Water Treatment PVT Ltd - இன் இயக்குநர் / ஜாமீன்தாரர்)** எண்.71-C, புதிய ஹை காலனி, செண்பகத்தோட்டம், மதுரை -625020. **8) திரு. சண்முகம் குப்புசாமி (Orion Water Treatment PVT Ltd - இன் இயக்குநர் / ஜாமீன்தாரர்)** பழைய எண்.14, புதிய எண்.29/4, பூந்தேரிபாண்டி கிராமம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் -602105

**நிலுவைத் தொகை : 31.10.2026 அன்றுள்ளபடி ரூ. 24,97,72,230.32 /- (ரூபாய் இருபத்து நான்கு கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சத்து எழுபத்து இரண்டு ஆயிரத்து இருநூற்று முப்பது மற்றும் பைசா முப்பத்து இரண்டு மட்டும்) மற்றும் இதர கட்டணங்கள்.
30.01.2023 அன்று கோரிக்கை அறிவிப்பு U/S 13(2) அளிக்கப்பட்டது;
09.05.2023 அன்று ஆக்கப்பூர்வ சுவாதீன அறிவிப்பு U/S 13(4) அளிக்கப்பட்டது;**

பிணைச்சொத்தின் விவரங்கள்:
திருமதி. J. இராஜாகனி, க/பெ. திரு. T. ஜெயபாண்டியன் அவர்களுக்குச் சொந்தமான சொத்து. புலம் எண்.394, பிளாக் எண்.2, T. சர்வே எண்.11,(பட்டாவின்படி T. சர்வே எண்-11/9) இல் அடங்கிய சென்னை - 600026, வடபழனி, திரு நகர் முதல் தெரு, மிகப்பழைய கதவு எண்.23, பழைய எண்-25, புதிய எண்-6/25 இல் அமைந்துள்ள (மொத்த விஸ்தீரணம் 2537சதுர அடியில் விற்பனை ஆவண எண்.2254/205 இன்படி திரு.A. கதிரேசன் அவர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட 435சதுர அடி, எஞ்சியுள்ள 2102சதுர அடி) 2537சதுர அடி நிலம் அதனுடன் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி

ரிசர்வ் தொகை: ₹ 3,10,00,000/- டெபாசிட் செய்ய வேண்டிய தொகை (EMD): ₹ 31,00,000/- உயர்வு தொகை: ₹ 1,00,000/-
வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்: ஏதுமில்லை.

மின் ஏல விற்பனை நடைபெறும் தேதி 26.11.2026, நேரம்: காலை 11 முதல் மாலை 4 மணி வரை

EMD செலுத்த கடைசி தேதி 25.11.2026 ; நேரம்: மாலை 5.00 மணி வரை	அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடுதல் : 17.11.2026

தொடர்புக்கு: திரு. VNS சந்திரசேகர் அச்சல்லா,
முதன்மை மேலாளர் / அங்கிகரிக்கப்பட்ட அதிகாரி, அலைபேசி எண்: 8328235168

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொருத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (1). **"எங்கு உள்ளதோ உள்ள நிலையில்"** மற்றும் **"என்ன உள்ளதோ உள்ள நிலையில்"** மற்றும் **"என்னவெல்லாம் உள்ளதோ உள்ள நிலையில்"** என்ற அடிப்படையில் சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். (2). அட்டவணையில் மேற்குறிப்பிட்ட பிணைச் சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த தகவலுக்குக் கூறப்பட்டுள்ளன, எனினும் இந்த பிரகடனத்தில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபதல்கள் ஏதேனும் இருப்பின் ஆகியவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பதிலளிக்கமாட்டார். (3). விற்பனையானது கீழே கையொப்பமிட்டவரால் **26.11.2026** அன்று காலை **11.00** மணி முதல் மாலை **04.00** மணி வரை **https://www.baanknet.com** என்ற இணைதளம் மூலமாக நடத்தப்படும். (4). விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.baanknet.com & www.pnb.bank.in** ஆகிய இணையதளங்களில் காணலாம்.

SARFAESI சட்டம் 2002 விதி 8 (6) & 9 (1) ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு.

தேதி : 10.11.2026
இடம் : சென்னை

முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி

ஞாயிறுதோறும் தினமணியுடன்... தினமணி கொண்டாட்டம்

கடன்கள் மீட்பு தீர்ப்பாயம்-III, சென்னை
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600006.
DRC எண். 303/2025

பாரத ஸ்டேட் வங்கி, பொன்னேரி கிளை, ...சான்றிதழ்தாரர்
-எதிர்-
திரு. P. அஜித் ...சான்றிதழ் கடன்தாரர்கள்

கோரிக்கை அறிவிப்பு
வருமான வரிச்சட்டம் 1961ன் இரண்டாவது அட்டவணை விதி 2ல் மற்றும் கடன்கள் மீட்பு மற்றும் திவால் நிலை சட்டம் 1993ன் (அவ்வப்போது திருத்தப்பட்டபடி) 25 முதல் 28 வரை பிரிவுகளின் கீழ் அறிவிப்பு

பெறுநர்
1) திரு. P. அஜித், த/பெ. பிரபாகரன், எண்.41, அம்மன் கோவில் தெரு, பிராட்வே, சென்னை 600001.

கடன்கள் மீட்பு மற்றும் திவால் நிலை சட்டம் 1993 பிரிவு 19ன் துணைப்பிரிவு 7 & 22ன் கீழ் **O.A.எண் 33/2019** இன் **01/07/2025** தேதியிட்ட உத்தரவுகளின் அடிப்படையில் மாண்புமிகு தலைமை அலுவலர், கடன்கள் மீட்பு தீர்ப்பாயம்-3, சென்னை அவர்கள், உங்களிடமிருந்து நிலுவை / வசூலிக்கப்பட வேண்டிய குறிப்பிட்டுள்ள தொகையான **ரூ.29,73,779/- (ரூபாய் இருபத்து ஒன்பது இலட்சத்து எழுபத்து மூன்று ஆயிரத்து எழுநூற்று எழுபத்து ஒன்பது மட்டும்)** மேலும் 10/07/2018 அன்று முதல் மொத்த தொகையும் வசூலிக்கும் வரை ஆண்டிற்கு 9.80% மாதாந்திர அடிப்படையிலான கூட்டு வட்டி, சேர்த்து செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை குறித்து சான்றிதழ் கடன்தாரருக்கு எதிராக இதன் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. DRC விதிகளின் படி தங்களிடமிருந்து மீட்கப்பட வேண்டிய கட்டணங்களை குறிப்பிட்டு **06/11/2025** அன்று வழங்கப்பட்ட **DRC எண்.303/2025** மீட்பு சான்றிதழ் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.
2) மேற்கூறிய தொகையை இந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து **15 நாட்களுக்குள்** சான்றிதழ் வைத்திருப்பவர் வங்கிக்கு செலுத்துமாறு இதன் மூலம் தாங்கள் அறிவுறுத்தப்படுகிறீர்கள். தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
3) சான்றிதழ் கடன்தாரர் 1 அவர்களுக்கு கோரிக்கை அறிவிப்பினை அனுப்பப்பட்டு அது பட்டுவாடா ஆகாமல் திரும்ப வந்து விட்டது.
4) எனவே **18/11/2026 அன்று காலை 11.30 மணிக்கு** தாங்கள் ஆஜராகுவதற்காக மாற்று சேவையின் மூலம் இச்சேவை நிறைவு பெற, கோரிக்கை அறிவிப்பினை ஆங்கிலம் மற்றும் தமிழ் செய்தித்தாளில் ஒரு நாள் பதிப்பில் பிரசுரிக்கும்படி தீர்ப்பாயம் ஆணையிட்டுள்ளது.
15.10.2026 அன்று தீர்ப்பாயத்தின் முத்திரையுடன் எனது கைப்பட வழங்கப்பட்டது.

(P.பிரேம்குமார்)
மீட்பு அதிகாரி